**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை :- திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ஆம் தேதி வியாழக்கிழமை**

**இ.ம.எண்.10/2025 இன் அ.வ.எண்.153/2016**

1. பாப்பம்மாள் (இறப்பு)
2. முத்து
3. கோபால்
4. தனம்
5. வள்ளி
6. நடராஜன் ... மனுதாரர்கள்/

1, 2, 4, 7, 12, 14 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. சாந்தி
2. சீனிவாசன் (இறப்பு)
3. மருதை
4. வடிவேல்
5. ஆறுமுகம்
6. பழனிச்சாமி
7. முருகன்
8. கிருஷ்ணன்
9. ரேவதி ... எதிர்மனுதாரர்கள்/

வாதி மற்றும் 3, 5, 6, 8 முதல் 11 மற்றும் 13 பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன்படி, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக பி.வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 29.08.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 06.02.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 12.02.2026 |
| மனுதாரருக்காக | : | திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர் |
| முதல் எதிர்மனுதாரருக்காக | : | திரு.A.ஜாபர் சேர் – வழக்கறிஞர் |

இரண்டாவது எதிர்மனுதாரர் : இறந்துவிட்டார்

மூன்றாவது எதிர்மனுதாரருக்காக: திரு.செந்தில்வடிவு – வழக்கறிஞர்

இதர எதிர்மனுதாரர்கள் : அசல் வழக்கில் தோன்றா தரப்பினர்கள்

1) **மனுவின் சுருக்கம் :–**

இம்மனுதாரர் அசல் வழக்கில் நான்காவது பிரதிவாதி. அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள் தற்பொழுது தான் கிடைக்கப்பட்டதாகவும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு இன்றியமையாத ஒன்று என்பதாலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக பி.வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யபப்பட்டுள்ளது.

2) **முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மூன்றாவது எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படி சரியல்ல. மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. அசல் வழக்கானது கடந்த 2016 ஆண்டு தொடரப்பட்டு, வாதிகள் தரப்பில் சாட்சிகள் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்ட சமயங்களில் மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்யாமல், தற்சமயம் சாட்சியை மீண்டும் அழைக்க அனுமதிக்க கோரும் காரணங்கள் ஏற்புடையதல்ல. மனுதாரருக்கு வழக்கில் எவ்வித முதல்நிலை நோக்கு தன்மை ஏதும் கிடையாது. எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) **தீர்வு :–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு இதர சாட்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில், பி.வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு அவர்களது வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.12 17:52:01 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-** இல்லை.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.12 17:52:17 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.